# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 65 — 1973 ජූනි 22 වැනි සිකුරාදා — 1973.06.22

65 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு யூன் மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் — — | 255 | வரவு செலவுக் கூற்றுக்கள் — — | — |
| பதவிகள்—வெற்றிடம் — — | — | வரவு செலவுத் திரட்டுகள் — — | 259 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பேறுபேறுகளும், பிறவும் — | 257 | ஆதன விற்பனைகள் — — — | — |
| துணை விதிகள் — — — | 259 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் — — | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் — — — | 260 |


**கவனிக்க.**—இலங்கை நிதித்தாபனம் சட்டமூலம் 1973 **ஆம் ஆண்டு யூன்** மாதம் 08 ந் **திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### விடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச்சட்டம்

1973.4.3 ந் திகதியன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் பொதுமக்கள் அறிதற்காகப் பிரசுரிக்கப்படுகிறது :—

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூன் மீ 6 ந் உ.

### தீர்மானம்

" (268 ம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச் சட்டமானது 1973.4.1 ந் திகதியிலிருந்து இதனோடுள்ள அட்டவணையில் வரையறை செய்யப்பட்டுள்ள பிரதேசத்துக்குள் நடைமுறையில் இருத்தல் வேண்டுமென மேற்கூறப்பட்டுள்ள கட்டளைச்சட்டத்தின் 3 (ஆ) என்னும் பிரிவின் கீழ் இப்பேரவை தீர்மானிக்கின்றது".

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், அலுத்குரு கோறளை வடக்கு " ஆ " காரியாதிகாரியின் பிரிவிலுள்ள துனகஹபற்றுவிலுள்ள 86 ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவில், கெலெபிட்டிமுல்லைக் கிராமத்தில் அமைந்துள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான நிலப் பிரதேசம் யாவும் :—

வடக்கு : நீர்கொழும்பு–திவுலப்பிட்டி பொது வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் வடக்கே 100 யார் தூரத்திலும் வரையப்பட்ட ஒரு கோடு சொல்லப்பட்ட வீதியின் 10¾ மைல் கல்லைச் சந்திக்கும் ஓர் இடத்திலிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட சமாந்தர கோட்டின் ஓரமாக மாரந்த கஹாமுல–பலல்கம பொது வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் மேற்கே 167 யார் தூரத்திலும் வரையப்பட்ட ஒரு கோட்டினைச் சந்திக்கும் வரைக்கும் ; அங்கிருந்து வடக்கு நோக்கி பின் குறிப்பிடப்பட்ட சமாந்தர கோட்டின் ஓரமாக நீர்கொழும்பு–திவுலப்பிட்டி பொது வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் வடக்கே 100 யார் தூரத்திலும் வரையப்பட்ட ஒரு கோட்டினைச் சந்திக்கும் வரைக்கும் ; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட சமாந்தர கோட்டின் ஓரமாக நீர்கொழும்பு–திவுலப்பிட்டி பொது வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குச் செங்குத்தாக 11½ வது மைல் கல்லடியில் வரையப்பட்ட ஒரு கோட்டினைச் சந்திக்கும்வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

கிழக்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கி நீர்கொழும்பு–திவுலப்பிட்டி பொது வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குச் செங்குத்தாக 11½ வது மைல் கல்லடியில் வரையப்பட்ட ஒரு கோட்டின் ஓரமாகவும் அதன் நீட்சியின் ஓரமாகவும் சொல்லப்பட்ட மத்திய கோட்டுக்குத் தெற்கே 100 யார் தூரத்திலுள்ள ஓர் இடம்வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

தெற்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து மேற்கு நோக்கி நீர்கொழும்பு–திவுலப்பிட்டி பொது வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் 100 யார் தூரத்திலும் வரையப்பட்ட ஒரு கோட்டின் ஓரமாக மாரந்தகஹமுல—ஹென்

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**கொழும்பு,**
**1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
**அரசாங்க அழுத்தகர்.**

பிற்றகெதற பொது வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் கிழக்கே 100 யார் தூரத்திலும் வரையப்பட்ட ஒரு கோட்டினைச் சந்திக்கும்வரைக்கும் ; அங்கிருந்து தெற்கு நோக்கி பின் கூறப்பட்ட சமாந்தர கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிலிருந்து செங்குத்தாக $\frac{1}{4}$ ஆவது மைல் கல்லடியில் வரையப்பட்ட ஒரு கோட்டினைச் சந்திக்கும் வரைக்கும் ; அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட செங்குத்தான கோட்டினதும் அதன் நீட்சியினதும் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டுக்கு மேற்கே 100 யார் தூரத்திலுள்ள ஓர் இடம்வரைக்கும் ; அங்கிருந்து வடக்கு நோக்கி மாரந்தகஹமுல–ஹென்பிற்றகெதற பொது வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் 100 யார் தூரத்திலும் வரையப்பட்ட ஒரு கோட்டின் ஓரமாக நீர்கொழும்பு–திவுலப்பிட்டி பொது வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் தெற்கே 100 யார் தூரத்திலும் வரையப்பட்ட ஒரு கோட்டினைச் சந்திக்கும் வரைக்கும் அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட சமாந்தர கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் $10\frac{3}{4}$ ஆவது மைல் கல்லைச் சந்திக்கும் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

மேற்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி நீர்கொழும்பு–திவுலப்பிட்டி பொது வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டுக்குச் செங்குத்தாக $10\frac{3}{4}$ ஆவது மைல் கல்லடியில் வரையப்பட்ட ஒரு கோட்டினதும் அதன் நீட்சியினதும் ஓரமாக பிரதேசத்தின் வட எல்லை ஆரம்பிக்கும் இடம்வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

6–785—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

**மின்சக்திச் சட்டம்**

1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்தி பற்றிய சட்டத்தின் 46 ம் பிரிவின் கீழும், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சரைச் கலந்தாலோசித்த பின்னர் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல் அமைச்சர் அளித்த அங்கீகாரத்துடனும் பத்தேகம கிராமச்சபையால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜூன் மீ 9 ந உ.

ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகளில்—

"சட்டம்" எனில் 1957 ம் ஆண்டின் 59 ம் இல்க்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்திச் சட்டம் எனப் பொருள்படும்.

"உத்தரவுப்பத்திரம்" எனில் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் பத்தேகம கிராமச்சபைக்கு வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரம் எனப்பொருள்படும்.

"உத்தரவுப்பத்திரக்காரர்" எனில் பத்தேகம கிராமச்சபை எனப் பொருள்படும்.

2. உத்தரவுப்பத்திரக்காரரிடமிருந்து மின்சக்தி பெற விரும்பும் எவரும்—

(1) விநியோகம் தேவைப்படுவதற்குக் குறைந்தது பதினான்கு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வழங்கும் படிவத்தில் உத்தரவுப்பத்திரக்காரருக்கு விண்ணப்பஞ் செய்ய வேண்டும் ; மேலும்

(2) வழங்கு கம்பிகளுக்கான செலவுகளை உத்தரவுப்பத்திரக்காரருக்கு முற்பணமாகச் செலுத்த வேண்டும், அல்லது உத்தரவுப் பத்திரதாரர் அவ்விதங் கேட்டால், சட்டத்தின் 33 ம் பிரிவின் கீழ் உத்தரவுப் பத்திரதாரருடன் எழுத்திலான ஒரு ஒப்பந்தமும் செய்தல் வேண்டும்.

(3) (அ) உத்தரவுப்பத்திரக்காரரின் மின்சக்தி வழங்கு மூலக்கம்பிகளுடன் இணைக்கக்கருதியுள்ள நிறுப்பு எதனதும் கம்பியிடும் வேலையை மின்னேந்திரவியற் பொறியியலாளர் கழகத்தினால் விதிக்கப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்குவிதிகளுக்கமைய அவ்வேலையைச் செய்து முடிக்கக்கூடிய திறமையுள்ள ஒரு தொழிற்றுபனத்திடம் அல்லது தனியார் ஒருவரிடம் பாவனையாளர் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வேலையை உத்தரவுப் பத்திரக்காரரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பரிசோதித்து, பரீட்சித்துப்பார்த்த பின்னரும், அவ்வேலை முன்னே சொல்லப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைவாகச் செய்யப்பட்டுள்ளதென உத்தரவுப் பத்திரக்காரர் திருப்தியடைந்த பின்னரும் மாத்திரமே அந்நிறுப்புக்கு மின்சக்தி விநியோகம் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அந்நிறுப்பு சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைவாக இல்லாவிட்டால் அந்நிறுப்பு அவ்வொழுங்கு விதிகளுக்கமைய அமைக்கப்படும்வரையில் அம்மனையகத்துக்கு மின்சக்தி விநியோகம் செய்யப்படமாட்டாது.

4. மின்சக்தி உபயோகிக்கும் ஒவ்வொருவரும் அம்மின்சக்திக்காக உத்தரவுப் பத்திரத்தில் விவரிக்கப்பட்ட விகிதத்தில் பணம் செலுத்த வேண்டும்.

5. (அ) பாவனையாளரின் மனையகத்தில் இருக்கும் சேவைவடக்கம்பிகளின் பாகமும் அம்மின்மாற்றியும், பிரதான பியூஸ்களும், மானியும் தாங்கு பலகையும் உத்தரவுப்பத்திரக்காரரின் சொத்துக்களாகவே இருக்கும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தரவுப்பத்திரக்காரரினால் அதிகாரமளிக்கப்பட்ட அவரது ஊழியரல்லாத எவரும் அவற்றை அகற்றவோ அல்லது தலையிடவோ கூடாது.

(ஆ) பாவனையாளரின் புறத்தில் இருக்கும் உத்தரவுப்பத்திரக்காரரின் பிரதான பியூஸ், மானி ஆகியவற்றின் கம்பிகள், வடக்கம்பிகளையும் வேறு உபகரணங்களையும் பராமரிப்பது பாவனையாளரின் பொறுப்பாகும்.

(இ) சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி துணிக்கப்பட்ட நிறுப்பு எதும் மீண்டும் இணைக்கப்பட்டால், அந்நிறுப்பை பரிசோதித்து மீண்டும் இணைப்பதற்குரிய சலார், உத்தரவுப்பத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அறவிடப்படும். அதனைப் பாவனையாளர் முற்பணமாகச் செலுத்திவிடவேண்டும்.

(ஈ) எப்பாவனையாளரதும் கம்பிகளின் அல்லது பொருத்துகளின் சில பாகங்களில் ஒழுங்கு இருக்கும் பட்சத்தில், தமது மனையகத்தின் மானிகாட்டும் சக்திச் செலவு யாவற்றுக்கும் மின்சக்திச் சட்டத்தின் 41 ம் பிரிவிற்கிணங்க அவர் பணஞ் செலுத்தப் பாத்திரராவார்.

6. (அ) தமது மனையகத்துக்கு மின்சக்தி வழங்கப்பட்ட பின்னர் எற்கனவே உபயோகித்துவந்ததைவிடப் பெரிய அளவான எந்த விளக்கையும் விசிறியையும் அலலது மோத்தரையும் உபயோகிக்க அல்லது மேலதிகமாக விளக்கெதையும் அல்லது மின்சக்தியைச் செலவிடும் உபகரணம் எதையும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பொருத்தவோ அல்லது தமது மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை மாற்றவோ அல்லது விஸ்தரிக்கவோ விரும்பும் பாவனையாளர் ஒவ்வொருவரும், அப்படியான வேலை ஆரம்பிப்பதற்குக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரகாரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) முன்பிருந்ததைவிடப் பெரிய விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி அல்லது மோத்தர் எதனையும் அல்லது மேலதிக விளக்கு அல்லது சக்தியைச் செலவிடும் வேறு உபகரணம் எதையும் அவ்வித விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி, மோத்தர், மேலதிக விளக்கு அல்லது வேறு உபகரணத்தை உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பார்வையிட்டுச் சோதித்துத் திருப்திப்படாதவரையில் எப்பாவனையாளரும், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவேனும் பிரதான நிறுப்புடன் இணைக்கவோ இணைக்கச் செய்யவோ அல்லது நிறுவவோ கூடாது.

7. (அ) எவ்வீட்டிலும் உத்தரவுப்பத்திரக்காரரின் பியூஸ் உருகிப் போகும் பட்சத்தில் பாவனையாளர் உடனடியாக உத்தரவுப்பத்திரக்காரருடைய விசைநிலைய அல்லது சகவிசை நிலைய, அவ்வதற்கேற்றவாறு பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரையும் தவிர்ந்த வேறெவரும் உத்தரவுப்பத்திரக்காரரின் சொத்தான உருகிப்போன பியூசை மாற்றக் கூடாது.

(ஈ) பாவனையாளருக்கு அல்லது உத்தரவுப்பத்திரக்காரருக்கு சொந்தமான பியூஸ் எதனையும் மாற்றுவதற்காக உத்தரவுப்பத்திரக்காரருடைய உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரதும் உதவி அவசியப்பட்டால் உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான கட்டணம் ஒன்று பாவனையாளரின் அந்த மாதக் கணக்கில் சேர்க்கப்படும்.

8. வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் முழு அல்லது பகுதி சக்தி விநியோகத்தடைப்பாட்டினால் உண்டாகும் நஷ்டம் அல்லது சேதம் எதற்கும் உத்தரவுப்பத்திரக்காரர் பாவனையாளருக்குப் பொறுப்பாளியாகமாட்டார்

9. சட்டத்தின் 45 ம் பிரிவின்படிக்குத் துணிக்கப்பட்டிருந்தபின் ஒரு நிறுப்பு மீண்டும் இணைக்கப்படுமாயின், சோதித்து மீளவும் இணைப்பதற்காக உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான ஒரு கட்டணத்தைப் பாவனையாளர் முற்பணமாகக் கொடுத்துவிடவேண்டும்.

10. (அ) கணக்குக் கொடுக்கப்பட்ட திகதியன்றே சகல கட்டணங்களும் கொடுபடவேண்டியனவாகக் கருதப்படும்.

(ஈ) ஒரு கணக்கில் பிழையிருப்பதாகச் செய்யப்படும் முறைப்பாடு எதுவும் பாவனையாளருக்குக் கணக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் செய்யப்படாவிட்டால் உத்தரவுப்பத்திரக்காரர் அதனை ஏற்கமாட்டார்.

11. (அ) தனது வீட்டுக்கு மின்சக்தி விநியோகம் தேவைப்படாத பாவனையாளர் ஒவ்வொருவரும் உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்தில் மூன்று முழு நாளைய அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

(ஆ) (அ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்படாத விடத்து தனது வீட்டிலுள்ள உத்தரவுப்பத்திரக்காரரின் உபகரணங்களுக்குப் பாவனையாளர் பொறுப்பாளியாக இருப்பதுடன், பாவனையாளருக்கு அவ்விநியோகம் தேவையில்லையென உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து மூன்று நாட்களுக்கு அவ்வீட்டில் செலவாகிய சக்தி முழுவதற்கும் பணம் செலுத்துதற்குப் பொறுப்பாளியாக இருப்பார். எனினும், சொல்லப்பட்ட மூன்று நாட்கள் கடக்கு முன்னர் உத்தரவுப் பத்திரக்காரரால் விநியோகம் துணிக்கப்பட்டால் துணிக்கப்பட்ட நேரம்வரைக்கும் அவ்வீட்டில் செலவான மின்சக்திக்கு மாத்திரமே பாவனையாளர் பணம் செலுத்தப் பாத்திரராவார்.

12. இருந்து வரும் இணைப்புகளுக்கு சேர்த்தல், மாற்றுதல், செம்மைப்படுத்தல் உட்பட்ட மின்சார இணைப்புவேலை எதனையும் தொடங்குதற்கு இரண்டு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் ஒன்றை உத்தரவுப்பத்திரகாரருக்குக் கொடுத்து உத்தரவுப்பத்திரக்காரரின் ஒரு உத்தியோகத்தர் உத்தேச வேலையைப் பரிசோதிக்க வாய்ப்பளிக்காது தொடங்கக்கூடாது.

13. உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கொடுத்து அவரது முன்னனுமதியைப் பெறாது எம்மனையகத்திலும் புதிய இணைப்பு எதற்கும் மின்சார வேலை செய்யப்படின் உத்தரவுப்பத்திரக்காரருக்கு முறைப்படியான அறிவித்தல் கிடைத்து அவசியமான பரிசோதனைகள் செய்யப்படுகின்றவரை, அத்தகைய வேலை செய்யப்பட்டுள்ள மனையகத்திற்கு மின்சக்தி வழங்குதற்கு உத்தரவுப்பத்திரக்காரர் மறுக்கலாம்.

14. உத்தரவுப்பத்திரக்காரரின் மின்சார விநியோக மூலக்கம்பிகளோடு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள நிறுப்பு எதற்கும், உத்தரவுப்பத்திரகாரருக்கு முன்னறிவித்தல் கொடுத்து அனுமதிபெறாமல் விஸ்தரிப்பு ஏதும் செய்யும் பட்சத்தில் அந்நிறுப்பு முற்றாக உத்தரவுப்பத்திரக்காரருடைய மின்சார விநியோக மூலக்கம்பிகளிலிருந்து துண்டிக்கப்படப் பாத்திரமானதாகும்.

15. எந்த நிறுப்பையும் மீண்டும் இணைப்பதற்காக விண்ணப்பம் ஒவ்வொன்றும் உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வைத்துள்ள படிவத்தில் செய்யப்பட்டு மின்சக்தி தேவைப்படுவதற்கு நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்துள் உத்தரவுப்பத்திரக்காரரின் காரியாலயத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

6–868—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்

17 (5) ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தேவரத்தினம் டான்போத் ஆகிய நான் இதன் அட்டவணையின் முதலாம் பத்தியிற் குறிப்பிட்டுள்ள கிராமச்சபையின் ஓர் கூட்டத்தை அட்டவணையின் இரண்டாம் பத்தியிற் குறிப்பிட்டுள்ள திகதியில், மூன்றும் பத்தியில் குறிப்பிட்டுள்ள நேரத்தில், நான்காம் பத்தியிற் குறிப்பிட்ட இடத்தில் இத்தால் கூட்டுகின்றேன்.

தேவரத்தினம் டான்போத்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வவுனியா.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
வவுனியா,
1973 ம் ஆண்டு யூன் மீ 12 ந உ.

அட்டவணை

| பத்தி 1 கிராமச்சபையின் பெயர் | பத்தி 2 திகதி | பத்தி 3 நேரம் | பத்தி 4 இடம் |
|---|---|---|---|
| முள்ளியவளை .. | 30.6.73 .. | காலை 10.00 .. | முள்ளியவளை கிராமச்சபை அலுவலகம் |

6–991—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உள்ளூராட்சிச் சேவை

தரம் I, II, III, வேலைகள், நீர்வேலைகள் அத்தியட்சர்கள், கொழும்பு மாநகரசபை வேலைகள், நீர்வேலைகள் பரிசோதகர்கள், மற்றைய உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள நீர்வேலைகள் பரிசோதகர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

மேற்படி பரீட்சையின் முடிவுகள் கீழ் தரப்படுகின்றன :—

**தரம் I— வேலைகள் அத்தியட்சர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை :**

| சுட்டிலக்கம் | பெயர் | சித்தியடைந்த பாடங்கள் |
|---|---|---|
| 3. | கே. தங்கசாமியர் | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன<br>2. II அளவு எடுத்தல்.<br>3. வரைதல். |
| 4. | வி. வேலும்மயிலும் | 1. நீர்விநியோகம், வடிகால். |

**தரம் II—வேலைகள் அத்தியட்சர்களுக்கான வினைத்திறமைகாண்தடைப் பரீட்சை,**
**தரம் II—வேலைகள் அத்தியட்சர்கள் :**

| சுட்டிலக்கம் | பெயர் | சித்தியடைந்த பாடங்கள் |
|---|---|---|
| 7. | ஆர். டி. அபேசேகர | 1. கட்டடம் அமைத்தல்.<br>2. வீதி அமைத்தல்.<br>3. மா. ந. ச. கட்டளைச் சட்டங்கள் முதலியன<br>4. அளவு எடுத்தல் I, II.<br>5. வரைதல். |
| 10* | சி. எ. ஏ. டோஸ் | 1. வரைதல். |
| 11. | ஆர். டபிள்யு டி. சில்வா | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன<br>2. வரைதல். |
| 13. | ஜே. மரியசிங்கம் | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டம் முதலியன<br>2. வரைதல். |
| 15. | பி. டி. பெரேரா | 1. கட்டடம் அமைத்தல். |

| சுட்டிலக்கம் | பெயர் | சித்திடைந்த பாடங்கள் |
|---|---|---|
| 18. | டி. ஆர். ருஜமணி | 1. வரைதல். |
| 22. | ஏ. செபஸ்ரியான்பிள்ளை | 1. வரைதல். |
| 24. | கே. செல்வரட்ணம் | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>2. அளவு எடுத்தல் I, II.<br>3. வரைதல். |

**தரம் II—வேலைகள் அத்தியட்சர்கள் :**

| சுட்டிலக்கம் | பெயர் | சித்திடைந்த பாடங்கள் |
|---|---|---|
| 8. | கே. பாலச்சந்திரன் | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>2. வரைதல். |
| 14. | வி. நவரட்ணம் | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>2. வரைதல். |
| 16. | கே. ஏ. எல். எஸ். பெரேரா | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>2. வரைதல். |
| 17. | ஏ. ஜே. குயின்ஸ்ரன் | 1. வரைதல். |
| 21. | எம். ஏ. சுலைமான் | 1. கட்டிடம் அமைத்தல்.<br>2. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>3. வீதி அமைத்தல்.<br>4. வரைதல். |
| 23. | என். செல்வநாயகம் | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>2. வரைதல். |
| 25. | டி. சி. ஏ. வணிகசேகர | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>2. அளவு எடுத்தல் I, II.<br>3. வரைதல். |
| 26. | எச். டி. ஜே. எப். யாபா | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>2. அளவு எடுத்தல் I, II.<br>3. வரைதல். |

**தரம் III—வேலைகள் அத்தியட்சர்களுக்கான வினைத்திறமைகாண்தடைப் பரீட்சை,**
**தரம் III—வேலைகள் அத்தியட்சர்கள் :**

| சுட்டிலக்கம் | பெயர் | சித்திடைந்த பாடங்கள் |
|---|---|---|
| 27. | ஏ. எம். அபூசாலி | 1. கட்டடம் அமைத்தல்.<br>2. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>3. வரைதல். |
| 28. | டபிள்யு. எம். எப். ஓ. டபிள்யு. பொன்சேகா | 1. வீதி அமைத்தல்.<br>2. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>3. அளவு எடுத்தல் I, II.<br>4. வரைதல். |
| 29. | எஸ். கிறிமுத்துகொட | 1. வீதி அமைத்தல்.<br>2. வரைதல். |
| 31. | பி. கே. பி. ஜயதிலக | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>2. அளவு எடுத்தல் I, II.<br>3. வரைதல். |
| 32. | எஸ். மகேஸ்வரன் | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>2. அளவு எடுத்தல் I, II.<br>3. வரைதல். |
| 35. | எம். எம். றட்ணுயக | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>2. வரைதல். |
| 38. | எஸ். தர்மகிட்ணர் | 1. வரைதல். |
| 40. | டி. கே. வெலிகலெ | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன. |

**தரம் II—நீர்வேலைகள் அத்தியட்சர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை**

| சுட்டிலக்கம் | பெயர் | சித்திடைந்த பாடங்கள் |
|---|---|---|
| 41. | டபிள்யு. ஏ. ஏ. புண்ணியசோம | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன. |

**வேலைகள் பரிசோதகர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை :**

| சுட்டிலக்கம் | பெயர் | சித்திடைந்த பாடங்கள் |
|---|---|---|
| 45. | ஆர். எம். எப். பண்டார | 1. வரைதல். |
| 46. | டபிள்யு. எம். கே. என். என். பர்ணுந்து | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>2. வரைதல். |
| 47. | டபிள்யு. ஐ. பி. வி. பர்ணுந்து | 1. வரைதல். |
| 49. | பி. கிறிமுத்துகொட | 1. மா. ந. ச. கட்டளைச்சட்டங்கள் முதலியன.<br>2. அளவு எடுத்தல் I, II.<br>3. வரைதல். |
| 54. | ஏ. பி. பி. ஜே. பெரேரா | 1. வீதி அமைத்தல். |
| 57. | ஆர். ருஜநாதன் | 1. வரைதல். |
| 58. | டி. சமரசேகர | 1. வீதி அமைத்தல். |
| 60. | கே. சண்முகசுந்தரலிங்கம் | 1. வீதி அமைத்தல்.<br>2. வரைதல். |

**நீர்வேலைகள் பரிசோதகர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை :**

| சுட்டிலக்கம் | பெயர் | சித்திடைந்த பாடங்கள் |
|---|---|---|
| 71. | ரி. பி. பி. பீரிஸ் | 1. வரைதல். |

* பரீட்சையை முடித்துள்ளனர்.

எட்கா பர்ணுந்து,
உ. ஆ. சே. அ. சபை,
செயலாளர்.

த. பெ. 530,
கொழும்பு,
1973 ம் ௵ ஜூன் ௴ 13 ந் ௳.

6–869—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

# துணைவிதிகள்

**கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்**

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் குருநாகலை மாவட்டத்திலுள்ள பலல்ல கிராமப் பிரதேசத் கிராமச்சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் (3) ம் உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

கா. பெ. விக்கிரமநாயக,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ௵ மே ௴ 15 ந உ.

துணைவிதிகள்

1. குருநாகலை மாவட்டத்திலுள்ள பலல்ல கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தைகள், முறைச்சந்தைகள் ஆகியவை சம்பந்தமான நியமத் துணைவிதிகளின் XXVII ம் பாகத்தின் 1 ம் துணைவிதியின் நோக்கத்துக்காக, பலல்ல சந்தைக்கான சந்தைப் பிரதேசமானது, அச்சந்தையினின்று 1 மைல் ஆரையைக் கொண்ட வட்டத்துள் அடங்கும் பிரதேசமாதல் வேண்டும்.

2. பலல்ல சந்தையில் இடம் அல்லது கடை எதனையும் உபயோகித்தற்கு அல்லது ஆட்சிபுரிதற்கு பின்வரும் விகிதங்களின்படியான கட்டணமொன்று அறவிடப்பட்டுச் செலுத்தப்படுதல் வேண்டும்.

| | நாளொன்றுக்கான கட்டணம் ரூ. ச. |
|---|---|
| (1) கடை ஒவ்வொன்றிற்கும் .. .. | 1 0 |
| (2) 3 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக் கூறுவொன்றுக்கும் .. .. | 0 10 |
| (3) 4 சதுர அடிக்கு மேற்பட்ட ஆனால் 20 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக்கூறுவொன்றுக்கும் .. | 0 30 |
| (4) 30 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக்கூறுவொன்றுக்கும் .. .. | 0 50 |
| (5) 50 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக்கூறுவொன்றுக்கும் .. .. | 0 75 |
| (6) 100 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக்கூறுவொன்றுக்கும் .. .. | 1 0 |

3. திறந்த பிரதேசத்திலுள்ள இடத்திற்குப் பின்வரும் விகிதப்படியான கட்டணமொன்று அறவிடப்பட்டுச் செலுத்தப்படல் வேண்டும் :—

| | |
|---|---|
| (அ) 8 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக்கூறுவொன்றிற்கும் .. .. | 0 20 |
| (ஆ) 8 சதுர அடிக்கு மேற்பட்ட ஆனால் 20 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக்கூறுவொன்றிற்கும் .. | 0 30 |
| (இ) 25 சதுர அடிக்கு மேற்பட்ட ஆனால் 50 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக்கூறுவொன்றிற்கும் .. | 0 40 |
| (ஈ) 50 சதுர அடிக்கு மேற்பட்ட ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக் கூறுவொன்றிற்கும் .. .. .. | 0 50 |

6-627—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

# வரவு செலவுத் திரட்டுகள்

**நாலாண்டுத் திட்டம்**

பட்டின சபை, ஊர்காவற்றுறை

**7.4.73 ம் திகதி நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தின் 2 ம் இல. தீர்மானம்**

24.2.73 ம் திகதி நடந்தேறிய மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேறிய 15 ம் இலக்கத் தீர்மானத்தைத் திருத்தி கீழ்க்காணும் வேலைகளை நாலாண்டுத் திட்டத்திற்கு அனுப்ப வேண்டுமென்று சபை ஏகமனதாகத் தீர்மானித்தது.

பிரேரித்தவர்: திரு. ஆர். எஸ். யேம்ஸ்.
ஆமோதித்தவர்: திரு. எஸ். ஏ. எவ். துரைசிங்கம்.

அரசாங்க நன்கொடையில்

| | ரூ. ச. |
|---|---|
| **1973** | |
| 1. சுருவில் வீதி 1 ம் ஒழுங்கை—கல் போட்டுத் தார் ஊற்றல் .. .. .. | 2,500 0 |
| 2. வேலணை வீதி 5 ம் ஒழுங்கை—கல் போட்டுத் தார் ஊற்றல் .. .. | 2,000 0 |
| 3. லாம்படி வீதி, கல் போட்டுத் தார் ஊற்றல் .. | 2,500 0 |
| 4. அமித்தாம்புலம் வீதி திருத்தலும் திருப்பித் தார் ஊற்றலும் .. .. .. | 2,500 0 |
| 5. சந்தைக் கடைகள்—இரண்டு கடைகள் கட்டல் .. | 1,250 0 |
| 6. சுருவில் வீதி பக்க வடிகால் அமைத்தல் (தொடர்ச்சி) | 1,000 0 |
| 7. சன சமூக நிலையம் | 250 0 |
| 8. சேரி ஒழிப்பு வீடமைப்புத் திட்டம்—பத்து வீடுகள் அமைத்தல் (ஏற்கனவே தரப்பட்ட நன்கொடையில்) | 50,000 0 |
| **1974** | |
| 1. அமித்தாம்புலம் ஒழுங்கை—கல் போட்டுத் தார் ஊற்றல் .. .. .. | 2,750 0 |
| 2. கடற்கரை வீதி மேற்கு—கல் போட்டுத் தார் ஊற்றல். . | 2,000 0 |
| 3. புளியடி ஒழுங்கை—கல் பரவித் தார் ஊற்றலும் தடைச்சுவர் கட்டலும் .. .. | 6,000 0 |
| 4. பக்க வடிகால் .. .. .. | 1,000 0 |
| 5. சனசமூக நிலையம் .. .. | 250 0 |
| **1975** | |
| 1. மின்சார உப நிலைய வீதி—கல் பரவித் தார் ஊற்றல் | 6,500 0 |
| 2. தடைச் சுவர் கட்டல்—கடற்கரை வீதி (மேற்கு) ஓரமாக தடைச் சுவர் அமைத்தல் .. | 4,250 0 |
| 3. பக்க வடிகால் .. .. .. | 1,000 0 |
| 4. சன சமூக நிலையம் .. .. | 250 0 |
| **1976** | |
| 1. கிணறுகள்—கொத்திக்குளம், உப்புக்குளங்களில் கிணறு தோண்டுதல் .. | 2,000 0 |
| 2. சந்தைக் கடைகள்—3 கடைகள் அமைத்தல் .. | 3,000 0 |
| 3. விளையாட்டு மைதானம்—விளையாட்டு மைதானம் வேலணை வீதியில் அமைத்தல் .. | 3,000 0 |
| 4. சேரி ஒழிப்பு வீடமைப்புத்திட்டம் (வீதி)—கல் பரவித் தார் ஊற்றல் .. .. .. | 2,750 0 |
| 5. பக்க வடிகால் .. .. .. | 1,000 0 |
| 6. சன சமூக நிலையம் .. .. | 250 0 |

**சபை நிதியில்**

| | ரூ. ச. |
|---|---|
| **1973** | |
| 1. அர்ச்.மேரி 1 ம் ஒழுங்கை—கல் பரவித் தார் ஊற்றல். . | 1,900 0 |
| 2. அர்ச்.மேரி 2 ம் ஒழுங்கை—கல் பரவித் தார் ஊற்றல். . | 2,000 0 |
| 3. வேலணை வீதி 6 ம் ஒழுங்கை—கல் பரவித் தார் ஊற்றல் .. .. .. | 2,000 0 |
| 4. மண்குளி வீதி மிகுதி வேலை—கல் பரவித் தார் ஊற்றல் .. .. .. | 1,100 0 |
| 5. உப்புக் குளம் வீதி—கல் பரவித் தார் ஊற்றல் .. | 2,000 0 |
| 6. அர்ச். யேம்ஸ் வீதி—பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள ஒழுங்கை—கல் பரவித் தார் ஊற்றல் .. .. .. | 1,920 0 |
| 7. அர்ச். யேம்ஸ் 2 ம் ஒழுங்கை—கல் பரவித் தார் ஊற்றல் .. .. .. | 2,000 0 |
| 8. நெச்சட்டா ஒழுங்கை—கல் பரவித் தார் ஊற்றல் .. | 500 0 |
| 9. பாலாவி வீதி—திரும்பத் தார் ஊற்றல் .. | 450 0 |
| 10. கொத்திக் குளம் வீதி—திரும்பத் தார் ஊற்றல் .. | 300 0 |
| 11. அர்ச். யேம்ஸ் வீதி—திரும்பத் தார் ஊற்றல் .. | 400 0 |
| 12. கதிரேசன் கோவில் ஒழுங்கை—திரும்பத் தார் ஊற்றல் | 250 0 |
| 13. சண்முகநாதன் வீதி—திரும்பத் தார் ஊற்றல் .. | 350 0 |
| 14. மண்குளி வீதி—திரும்பத் தார் ஊற்றல் .. | 450 0 |
| 15. சுருவில் வீதி 2 ம் ஒழுங்கை—திரும்பத் தார் ஊற்றல் | 350 0 |
| 16. சந்தையிற் கடைகள்—இரண்டு கடைகள் அமைத்தல். . | 1,030 0 |
| 17. பக்க வடிகால் .. .. .. | 1,000 0 |

| | ரூ. | ச. |
|---|---|---|
| **1974** | | |
| 1. அயித்தாம்புலம் வீதி 2 ம் ஒழுங்கை—கல் பரவித் தார் ஊற்றல் .. .. .. | 2,200 | 0 |
| 2. கடற்கரை வீதி மேற்கு—கல் பரவித் தார் ஊற்றல் .. | 2,100 | 0 |
| 3. வேலணை வீதி 5 ம் ஒழுங்கை (கொத்திக்குளம் வரை)—கல் பரவித் தார் ஊற்றல் .. | 2,100 | 0 |
| 4. தடைச்சுவர்—கொத்திக்குளத்தில் தடைச்சுவர் அமைத்தல் .. .. .. | 3,800 | 0 |
| 5. பக்க வடிகால் .. .. .. | 1,000 | 0 |
| **1975** | | |
| 1. வேலணை வீதி 3 ம் ஒழுங்கை—கல் பரவித் தார் ஊற்றல் .. .. .. | 1,000 | 0 |
| 2. உப்புக்குளம் ஒழுங்கை—கல் பரவித் தார் ஊற்றல் .. | 1,000 | 0 |
| 3. கிணறுகள்—இரண்டு கிணறுகள் அக்கை தங்கை குளத்தில் அமைத்தல் .. .. | 2,500 | 0 |
| 4. தடைச் சுவர்—கடற்கரை வீதி ஓரமாக தடைச்சுவர் அமைத்தல் .. .. .. | 2,800 | 0 |
| 5. நீச்சல் தடாகம்—பொலிஸ் நிலையத்திற்கு எதிரில் கடற்கரை அண்மையில் அமைத்தல் .. | 5,000 | 0 |
| 6. பக்க வடிகால் .. .. .. | 1,000 | 0 |
| **1976** | | |
| 1. அர்ச். யேம்ஸ் வீதி—திரும்பத் தார் ஊற்றல் .. | 400 | 0 |
| 2. கதிரேசன் கோவில் வீதி—திரும்பத் தார் ஊற்றல் .. | 400 | 0 |
| 3. வேலணை வீதி 1 ம் ஒழுங்கை—திரும்பத் தார் ஊற்றல் .. .. .. | 250 | 0 |
| 4. உப்புக்குளம் வீதி—திரும்பத் தார் ஊற்றல் .. | 450 | 0 |
| 5. அயித்தாம்புலம் வீதி—திரும்பத் தார் ஊற்றல் .. | 525 | 0 |
| 6. அர்ச். மேரி வீதி 1 ம் ஒழுங்கை—திரும்பத் தார் ஊற்றல் .. .. .. | 250 | 0 |
| 7. அர்ச். மேரி வீதி 2 ம் ஒழுங்கை—திரும்பத் தார் ஊற்றல் .. .. .. | 300 | 0 |
| 8. பாலாவி வீதி—திரும்பத் தார் ஊற்றல் .. | 400 | 0 |
| 9. மண்குளி வீதி—திரும்பத் தார் ஊற்றல் .. | 600 | 0 |
| 10. சுருவில் வீதி 1 ம் ஒழுங்கை—திரும்பத் தார் ஊற்றல் | 450 | 0 |
| 11. வேலணை வீதி 5 ம் ஒழுங்கை—திரும்பத் தார் ஊற்றல் .. .. .. | 450 | 0 |
| 12. பக்க வடிகால் .. .. .. | 1,000 | 0 |

**கடன் நிதி வேலை**

| | ரூ. | ச. |
|---|---|---|
| **1973** | | |
| 1. சபைக்கு டிராக்டர் கொள்வனவு—புது டிராக்டரும், பெட்டியும் கொள்வனவு செய்தல் .. | 35,000 | 0 |
| 2. நீர் விநியோகம்—விரிவாக்கல்—நீர் விநியோகம் .. | 1,40,000 | 0 |
| **1974** | | |
| 1. அலுவலகக் கட்டடம்—அலுவலகக் கட்டடம் அமைத்தல் .. .. .. | 80,000 | 0 |
| 2. நூல்நிலையக் கட்டடம்—சபை நூல் நிலையக் கட்டடம் அமைத்தல் .. .. .. | 15,000 | 0 |
| **1975** | | |
| இல்லை .. .. .. | — | |
| **1976** | | |
| இல்லை .. .. .. | — | |

உண்மைப் பிரதியென உறுதிப்படுத்துகிறேன்.

பி. இம்மானுவேல்,
தலைவர்,
பட்டின சபை, ஊர்காவற்றுறை.

6-708/2—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

## நானாவித அறிவித்தல்கள்

### மட்டக்களப்பு மாநகரசபை

1973 ம் ஆண்டிற்கான சோலைவரி இடாப்புகள்

மாநகரசபையின் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 252) 235 (1) ம் பிரிவின் படி மட்டக்களப்பு மாநகரசபையின் வட்டாரங்கள் 15, 16, 17, 18, 19 ன் 1973 ம் ஆண்டிற்கான சோலைவரி இடாப்புகள் தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளன என்பதையும், அவைகள் பொதுமக்கள் பார்வைக்காக மாநகர சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

கே. பீ. குணரத்ன,
மாநகர ஆணையாளர்,
மட்டக்களப்பு.

மாநகரசபை அலுவலகம்,
மட்டக்களப்பு,
1973 ம் ஆடு யூன் மீ 7 ந உ.

6-812—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

### மட்டக்களப்பு மாவட்டம், ஓட்டமாவடி. கிராமச்சபை

1973 ம் ஆண்டு எலவிற்பனை உத்தரவுச்சீட்டு

எமது கிராமச்சபைப் பிரதேசத்தினுள் எலவிற்பனை செய்வதற்கு தரகரும் எலவிற்பனையாளரும் கிழக்கிலங்கை கடுதாசி ஆலைக் கூட்டுத் தாபன முகாமையாளருக்கு எலவிற்பனையாளர், புரோக்கர்கள் சட்டம் 109, 4 (1 ம்) பிரிவின் கீழ் உரிய கட்டணம் அறவிட்டு 1973 ம் ஆண்டு எலவிற்பனை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகிறேன்.

உ. முகம்மது சரீப், ஜே.பி.,
தலைவர்,
கி. ச. ஓட்டமாவடி.

கிராமச்சபைக் காரியாலயம்,
ஓட்டமாவடி, வாழைச்சேனை,
1973 ம் ஆடு யூன் மீ 11 ந உ..

6-812—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

### மட்டக்களப்பு மாவட்டம், ஓட்டமாவடி கிராமச்சபை

1973 ம் ஆண்டு எலவிற்பனை உத்தரவுச்சீட்டு

எமது கிராமச்சபைப் பிரதேசத்தினுள் எலவிற்பனை செய்வதற்கு தரகரும் எலவிற்பனையாளரும் ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் தலைவருக்கு எலவிற்பனையாளர், புரோக்கர்கள் சட்டம் 109, 4 (1) ம் பிரிவின் கீழ் உரிய கட்டணம் அறவிடப்பட்டு 1973 ம் ஆண்டு எலவிற்பனை உத்தரவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகிறேன்.

உ. முகம்மது சரீப், ஜே.பி.,
தலைவர்,
கி. ச. ஓட்டமாவடி.

கிராமசபைக் காரியாலயம்,
ஓட்டமாவடி., வாழைச்சேனை,
1973 ம் ஆடு யூன் மீ 11 ந உ..

6-891—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| யூலை | 6.7.73 | வெள்ளி | 29.6.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 13.7.73 | வெள்ளி | 6.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 20.7.73 | வெள்ளி | 13.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 27.7.73 | வெள்ளி | 20.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 27.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 3.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 10.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 24.8,73 | வெள்ளி | 17.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 24.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 31.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 7.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 14.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 21.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.